# பெற்ற தாயும் வளர்த்த தாயும்

ந்யாயவேதாந்த வித்வான் ஸ்ரீ.உ.வே. காரப்பங்காடு
வேங்கடாசார்ய ஸ்வாமி, சென்னை

ஒன்றை உள்ளபடி உணருவதற்குக் காரணம் எதுவோ அதைப் பிரமாணம் என்றும், உள்ளபடி உணரப்பெறுவது எதுவோ அதைப் பிரமேயம் என்றும் கூறுவர். பிரமேயங்களுள், திருமகள் கொழுநனான நாராயணன், மிகவும் சிறப்புடையவன்; ஒத்தாரும், மிக்காரும் இல்லாதவன். அப்பரமபுருஷன் நம் நன்மையைத் திருவுள்ளம் பற்றி, வட மதுரையில் தேவகியாருக்குத் திருக்குமாரனாய்த் திரு அவதாரம் செய்தருளினான். இங்ஙனம் திரு அவதாரம் செய்தருளின வரலாற்றை, தேவகி பெற்ற உருவு கரிய ஒளி மணிவண்ணன் என்று புகழ்ந்து பேசுவர். அப்பரமன், திரு அவதாரம் செய்தருளின காலத்திலேயே, திருவாய்ப்பாடியில், அசோதையார் திருமாளிகைக்கு எழுந்தருள, அவ் அசோதையாரும் அப்பரமனான கோவிந்தன் மேல் குற்றம் சொல்லுவாரைத் தன் சொல்லாலே வாய்மாளப் பண்ணி, தன் வசமாக்கி, கஞ்சன் கருத்தைக் குலைத்து, நிறம் பெற வளர்த்து அவனை வ்ருத்தி அடையும்படி செய்தார். இவ்வாறு வ்ருத்தி அடையும்படி செய்த சரிதத்தை, ''ஏதேனும் சொல்லி அசலகத்தார் ஏதேனும் பேச நான் கேட்கமாட்டேன்'' ''தூசனம் சொல்லும் தொழுத்தைமாரும் தொண்டரும் நின்ற இடத்தில் நின்று'' ''அசோதை வளர்க்கின்ற செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை'' என்று கொண்டாடிக் கூறுவர். இங்கு, ''கோவிந்தன் திரு அவதாரம் செய்தருளின இடம் தேவகியார், வளர்ந்தருளின இடம் அசோதையார்'' என்பது தெளிவு.

பிரமாணங்களுள், மிகவும் சிறந்ததான திருவாய் மொழி, திரு அவதாரம் செய்தருளின இடம் நம்மாழ்வார்; வளர்ந்தருளின இடம் எம்பெருமானார். திரு அரங்கம் என்னும் திருப்பதியில் திருக்கண் வளர்ந்தருளும் பெரிய பெருமாளுக்கு, ஏனைய எம்பெருமான்களிலும் தனிப்பெருமை உண்டு. இப்பெருமையை, ''தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம்'' என்று பல இடங்களில் போற்றிப் பேசியிருப்பதை நாம் நன்கு அனுபவிக்கலாம். நம்மாழ்வாருக்கும் ஏனைய ஆழ்வார்களிலும் மிகவும் சிறப்பு உண்டு. இச்சிறப்பையும், ''உண்டோ சடகோபர்க்கு ஒப்பொருவர்'' என்னுமிடத்தில் நாம் நன்கு அறியலாகும். இப்படி ஒப்பற்றவராய்ப் புகழப்பெறும்

நம்மாழ்வார், பெரிய பெருமாளையே விஷயமாகக் கொண்டுள்ள திருவாய் மொழியைப் பெற்றெடுத்த தாயாவர். வருந்திப் பெற்ற பிள்ளையை வளர்த்தெடுக்கும் தாயைப் போன்று, திருவாய் மொழியை வளரும்படி செய்த தாயாவர், எம்பெருமானார். நம்மாழ்வார் திரு அவதாரம் செய்தருளி, திருவாய்மொழி பாடி, அவாவற்று வீடு பெற்று எழுந்தருளின பின்பு, வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக் கொள்ளாத புறச்சமயத்தாரும், வேதத்தை பிரமாணமாக ஒப்புக் கொண்டே அவ்வேதத்திற்கு விபரீதமாய்ப் பொருள் கூறும் அகச் சமயத்தாரும் திருவாய் மொழியை மறையச் செய்து வருகிறபடியைக் கண்டு, அதை ஸ்ரீ பாஷ்ய ஸூக்திகளாலே ஒருவாறு தடுத்து, ஸ்ரீ பாஷ்யம் முதலான திவ்விய சாஸ்திரங்களை அத்திருவாய் மொழிக்குக் காவலான வேலியாக வைத்து, தன் வசமாக்கி, திருக்குருகைப் பிரான் பிள்ளானைக் கொண்டு அத்திருவாய் மொழிப்பொருளை வெளியிடுவித்து - இவ்வாறு திருவாய்மொழியை வளரச் செய்து போந்தவரன்றோ, எம்பெருமானார்.

இக்கருத்தை பட்டர் அருளிச் செய்த

''வான்திகழும் சோலைமதிளரங்கர் வன்புகழ் மேல்
ஆன்ற தமிழ் மறைகளாயிரமும் - ஈன்ற
முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த
இதத் தாய் இராமானுசன்''

என்னும் தனியனில் நாம் அனுபவிக்கலாகும்.

திருவாய் மொழிக்கு நம்மாழ்வாரும் எம்பெருமானாரும் பெற்ற தாயாயும் வளர்த்த தாயாயும் இருப்பது போன்று, ஸ்ரீ பாஷ்யம் முதலான திவ்விய சாஸ்திரங்களுக்கு எம்பெருமானாரும் தேசிகனும் பெற்ற தாயாயும் வளர்த்த தாயாயும் இருப்பவர்கள்.

நாதமுனி முதலான நம் தேசிகருள், எம்பெருமானாருக்குத் தனிப்பெருமை உண்டு. ''திருமகள் கொழுநனான நாராயணனே மிக மிக உயர்ந்த தெய்வம்'' என்னும் தத்துவத்தையும், ''அப்பரமன் பால் செய்யும் பக்தி ப்ரபத்திகளே உபாயம்'' என்னும் ஹிதத்தையும், அப்பரமனை அனுபவித்து அடிமை செய்து உகப்பிப்பதே மிக மேலான ச்ரேயஸ்'' என்னும் புருஷார்த்தத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது, விசிஷ்டாத்வைதமதம். இம்மதம் மிகச் சிறந்த பிரமாணமான வேதஸித்தம்; ஆதலின், வைதிகம் அநாதி என்று புகழப் பெருகிறது. ஆயினும், அந்த அந்தக் காலத்திற்கு இம் மதத்திற்கு புறச் சமயத்தாராலும் அகச் சமயத்தாராலும், மறைவு ஏற்பட்டது உண்டு. அந்த ஸமயம் எம்பெருமானார் திரு அவதாரம் செய்தருளி, ஸ்ரீபாஷ்யம் முதலிய திவ்விய சாஸ்திரங்களினாலும் உபதேசங்களினாலும் மிகவும் பிரகாசம் அடையச் செய்தவர். அதனால், எம்பெருமானார் தர்சனம் என்று எம்பெருமானார் ஸம்பந்தத்தை யிட்டே இதற்கு நம் பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார். இதனாலும், ஆமுதல்வன் இவன் என்று ஆளவந்தாரால் கடாக்ஷிக்கப்

பெற்றவர். எம்பெருமானார் என்று இருப்பதாலும் இவர் பெருமை நன்கு விளங்கும். பூர்வாசாரியர்களாகிற இரத்தினங்களாலே சமைக்கப் பெற்றுள்ள ஹாரத்தில் நாயகக் கல் ஸ்தாநத்தில் எழுந்தருளியிருக்கிறவர். எம்பெருமானார். யதிராஜேந நிபத்த நாயகஸ்ரீ: என்று தேசிகன் அருளிச் செய்திருப்பதாலும் எம்பெருமானார் பெருமை மிகவும் ஸ்பஷ்டம். இவ்வாறு பெருமை பெற்றுள்ள எம்பெருமானாரிடமிருந்து அவதரித்துள்ள ஸ்ரீபாஷ்யம் முதலான திவ்விய சாஸ்திரங்களுக்கு, தம் உபதேசங்களாலும், தத்வடீகை, அதிகரண ஸாராவளி, சததூஷணீ முதலிய அத்யாச்சரியங்களான திவ்விய சாஸ்திரங்களினாலும், மிக மிக ப்ரகாசத்தை உண்டாக்கி, எம்பெருமானார் தர்சனத்தை ஓங்கித் தழைக்கச் செய்தவர், தேசிகன். இங்ஙனம் பெற்ற தாயும் வளர்த்த தாயுமான எம்பெருமானார், தேசிகன் என்னும் இரு ஆசார்ய ரத்தினங்களைப் பெற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களான நமக்கு ஒரு குறையுமில்லை. நாம் நம் ஸ்வரூபத்துக்கு ஏற்ப இரண்டு திருநாமங்களையும் அடிபணிந்து உய்வோம்.

லோகத்தில் ராஜநீதி, காம ஶாஸ்த்ரம் போன்ற விஷயங்களில் ஈடுபட்டுள்ளவர்களால் மோக்ஷத்தை அடைந்துவிட முடியாது. இவை, **இவற்றில் நமது மனது ஈடுபட்டால்,** நமக்கு இருக்கிற புண்யத்தை அபஹரித்துக் கொண்டு நம்மை பாபிகளாக ஆக்கி விடுகின்றன. ஜீவாத்மாக்களுக்கு மநுஷ்ய ஜந்மம் ஸுலபமாகக் கிடைக்கிறதில்லை. மநுஷ்ய ஜந்மம் வேண்டும் என்று தேவர்களும் விரும்புகிறார்கள் என்பதை ஸ்ரீவிஷ்ணுபுராணம் சொல்லுகிறது. தர்மாநுஷ்டானம், தத்த்வ ஜ்ஞாநம், பகவதாராதனம் முதலானவைகளைப் பெற்று வாழ்ச்சியை அடைய வழி செய்கிறது என்னும் பெருமை மநுஷ்ய ஜந்மாவுக்கு உண்டு.

- காரப்பங்காடு ஸ்வாமி